

**பேராசிரியர் தீரன்.**

ஈழத் தமிழ் மக்கள் மத்தியில் இவர் அதிகளவில் பிரபலம் பொறாதபோதும், தமிழீழத் தேசியத்திற்காகவும், ஈழத் தமிழ் மக்களுக்காகவும் இன்றுவரை அயராது பாடுபடுபவர். 1989ம் ஆண்டளவில் பாட்டாளி மக்கள் கட்சியை (பா.ம.க) உருவாக்கி அதன் தலைமைப் பொறுப்பை வகித்த பெருமை இவரையே சாரும்.

தமிழக சட்டமன்ற உறுப்பினராக பதவி வகித்தவர். ராஜீவ் காந்தி கொலையின் பின்னர், தமிழகத்தில் ஈழத் தமிழ் மக்களுக்கு எதிரான நிலைப்பாடு அதாவது ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாகப் பேசுவதோ, விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகப் பேசுவதோ குற்றம் என்பது போன்று மக்கள் அச்சப்பட்டுக்கொண்டிருக்கும் ஒரு சூழ்நிலை உருவாக்கப் பட்டுக்கொண்டிருந்த நிலையில், ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாக குரல் எழுப்புவது பயங்கரவாதமாக, துரோகமானதாக பார்க்கப்பட்ட நிலையில், 1992ம் ஆண்டளவில் ஈழத் தமிழர் வாழ்வுரிமை மாநாட்டை மூன்று நாட்கள் நடத்தி, மாநாட்டின் முடிவில் தமிழீழத் தேசியத் தலைவரின் உருவப்படங்களைப் பெருமளவில் தாங்கிய பிரமாண்டமான பேரணியை நடத்தி தமிழக மக்களின் உணர்வலைகளை ஈழத் தமிழ் மக்களுக்கு ஆதரவாக மீண்டும் திருப்புவதில் பெரும் வெற்றி கண்டவர். 1995ம், 1997ம் ஆண்டுகளிலும் இவ்வாறான மாநாடுகளை நடத்தி தமிழக மக்களின் உணர்வலைகளை ஈழத் தமிழர்கள் பக்கம் வைத்திருப்பதில் பெரும்பங்காற்றியவர்.

இதனாலேயே, 1998ல் பா.ம.கவின் தலைவர் பதவியில் இருந்து இவர் வெளியேற வேண்டிய நிர்ப்பந்த நிலையும் ஏற்பட்டது. ஆனாலும், ஈழத் தமிழர்களுக்கும், தனித் தமிழீழம் அமையவேண்டும் என்பதிலும் இன்னும் உறுதியோடு செயற்பட்டு வருகின்றார். அதற்காக பல நெருக்கடிகளைச் சந்தித்தபோதும், உறுதியோடு அதற்கான பணிகளை முன்னெடுக்கின்றார். தற்போது பசுமைத் தமிழகம் எனும் அமைப்பை உருவாக்கி விவசாயிகளுக்காக அரும்பணியாற்றி வருபவர். அண்மையில் ஐரோப்பிய நாடுகளுக்கு பயணம் மேற்கொண்ட இவரை ஈழமுரசு சந்தித்து கலந்துரையாடியது. இதன்போது தற்போது புலம்பெயர்ந்த நாடுகளில் நடைபெறும் வட்டுக்கோட்டைத் தீர்மானம் மீதான மீள் வாக்கெடுப்பும், அதற்கு முற்றிலும் முரணான வகையில் நகரும் நாடு கடந்த அரசின் செயற்பாடும் குறித்து தனது காரசாரமான கருத்துக்களை முன்வைத்தார். நாடு கடந்த அரசின் செயற்பாட்டுக்குப் பின்னால் பல வலிமையான கரங்கள் இருக்கின்றன என்று குற்றம்சாட்டினார். அவருடான சந்திப்பை ஒரு பேட்டி வடிவில் அல்லாமல், அதனை தொடர் கட்டுரை வடிவில் இங்கு தருகின்றோம். *இவ்வாரம் பகுதி 5*

# வட்டுக்கோட்டைத் தீர்மானத்தின் அவசியமும் நாடுகடந்த அரசின் பின்னணியும்

## மாவீரர்களினதும், உலகத் தமிழர்களினதும் கனவு தமிழீழம்தான் அதற்கு யார் தீங்கு விளைவித்தாலும் மன்னிக்கப்பட மாட்டார்கள்

இலண்டனில் நாடு கடந்த அரசு வெளியிட்ட 16 பக்க அறிக்கையில் இருந்த கேள்வி பதிலுக்கு ஒவ்வொன்றாக கேள்விகளை எழுப்பினேன்.

நீங்கள் வட்டுக்கோட்டைத் தீர்மானத்தின் மீதான மீள்வாக்கெடுப்பு நடாத்துவது மாவீரர்களிற்குச் செய்கின்ற துரோகம், அது தேவையற்றது, வீண்வேலை என்றெல்லாம் சொல்லிக் கொண்டு இருக்கின்றீர்கள். நீங்கள் வட்டுக் கோட்டைத் தீர்மானத்தின் மீதுதான் நாடுகடந்த அரசு அமைப்பதாகச் சொல்லிக்கொள்கின்றீர்கள். அப்படியென்றால் இரண்டு பேரும் ஒரே வட்டுக்கோட்டைத் தீர்மானத்திற்காகத்தானே செயற்படுகின்றீர்கள். ஆனால், அவர்கள் ஏற்கெனவே ஒரு செயற்பாட்டைத் தொடங்கிவிட்டார்கள். நீங்கள் இன்று நான்கு மாதமாகியும் நடாத்திக்கொண்டிருப்பதாகச் சொல்கின்றீர்கள். இன்னும் யாப்பே இயற்றவில்லை என்று சொல்கின்றீர்கள். உங்களுக்கு முன்னாடியே இப்பொழுது நடக்கக்கூடிய பிரச்சினைகளை மனதிலே உள்வாங்கிக்கொண்டு புலம்பெயர்ந்து வாழக்கூடிய தமிழர்கள், தேசியத் தலைவர் கொடுத்த அந்தப் பங்களிப்பைச் செய்யவேண்டுமென்பதற்காக ஆர்வத்தோடு செயற்படும் நேரத்தில் அவர்களிற்கு நடத்துகின்ற மீள்வாக்கெடுப்பு எப்படி மாவீரர்களிற்கு செய்கின்ற துரோகமாக அமையும் என்பதற்கு விளக்கம் சொல்லவேண்டும் என்று கேட்டேன். அதற்கு அவர்கள் சரியான விளக்கம் சொல்லவில்லை.

இன்னொன்றையும் நான் அடுத்துக் கேட்டேன். நீங்கள் உங்களுடைய இரண்டாவது கேள்வி பதிலிலேயே சொல்கின்றீர்கள். இப்பொழுது முள்ளிவாய்க்காலிலே நடைபெற்றது படுகொலை என்று, நான் என்ன கேட்டேனென்றால் சர்வதேச நாடுகளே அங்கு நடப்பது இனப்படுகொலை என்பதை ஒப்புக்கொள்ளக் கூடிய ஒரு சூழ்நிலை உருவாகி வருகின்றது. ஆனால் நீங்கள் உங்களுடைய கேள்வி பதில் அறிக்கையில் படுகொலை என்றுதான் தமிழிலும், ஆங்கிலத்திலும் கொடுத்திருக்கின்றீர்கள். இனப்படுகொலை என்கின்ற வார்த்தை வரவில்லை. இது யாருக்கோ அச்சப்பட்டுக்கொண்டு அடக்கி வாசிப்பதைப்போல் எனக்குத் தோன்றுகின்றது. ஏன் இனப்படுகொலை என்று உங்களுடைய வாசகங்களில் குறிப்பிடவில்லை. சொல்ல மறுக்கின்றீர்கள். பயப்படுகின்றீர்கள். யாருக்காகப் பயப்படுகின்றீர்கள்? எதற்காகப் பயப்படுகின்றீர்கள்? பாதிக்கப்பட்ட நாம், நம்முடைய இனமக்கள் படுகொலை செய்யப்பட்டுக் கொண்டிருப்பது இன்று நேற்றல்ல. 56-58 களிலிருந்து தொடர்ந்த இன அழிப்புகள்தான் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. தொடர்ந்து இதைத்தான் அவர்கள் நடாத்திக்கொண்டிருக்கின்றார்கள். யாழ் நூலகத்தை எரித்தார்கள், தமிழர்களுடைய ஆலயங்களையெல்லாம் தகர்த்திருக்கின்றார்கள். தாய், தந்தையரை இழந்த பிள்ளைகள் இருந்த இடம் என்றுகூடப் பார்க்காமல் அதன்மீது குண்டு வீசுகின்றார்கள். சிகிச்சை பெறுகின்ற மருத்துவமனைகளையெல்லாம் நாசப்படுத்தியிருக்கின்றார்கள். ஆகவே இவையெல்லாம் இன அழிப்புகள். இந்த இன அழிப்புகளையெல்லாம் யாரோ ஒருவர் ஆத்திரத்தால் செய்துவிட்டால் அது படுகொலையோ, கொலை என்றோ சொல்லலாம். ஆனால் ஒரு இனம் திட்டமிட்டு இன்னொரு இனத்தை அழித்துக்கொண்டிருக்கின்ற வேலையைச் செய்கின்ற பொழுது அதாவது 60 ஆண்டுகளாக அவர்கள் அதைச் செய்கின்றபொழுது ஏன் சொல்லத் தயங்குகின்றீர்கள், யாருக்காகச் சொல்லத் தயங்குகின்றீர்கள். உங்களைத் தடுப்பது யார்? என்று கேட்டேன். அதற்கு அவர்கள் சரியான பதில் சொல்லவில்லை. எதிர்காலத்தில் அவற்றைத் திருத்திக்கொள்வோம் என்று மட்டும் சொன்னார்கள்.

அடுத்த கேள்வி

உங்களுடைய 16 பக்க அறிக்கையிலே எல்லா இடங்களிலேயும் தன்னாட்சி என்று எழுதியிருக்கின்றீர்கள். தன்னாட்சியில் இரண்டு வகை இருக்கின்றது. 2002ம் ஆண்டு மாவீரர் தினத்தன்று மாவீரர் உரையிலே தலைவர் குறிப்பிடுகின்றார். ஒன்று உள்ளக சுயநிர்ணய உரிமை, இன்னொன்று வெளியக சுயநிர்ணய உரிமை. நாம் உள்ளக சுயநிர்ணய உரிமைக்குக்கூட ஒப்புக்கொண்டு வருகின்றோம். ஆனால் எந்த ஒரு உரிமை கேட்டாலும் தர ஒப்புக்கொள்வதில்லை. இப்படிப்பட்ட சூழ்நிலையிலே இனிமேல் எதிர்காலத்திலே ஐ.நா வரையறைத்திருக்கின்ற தீர்மானத்தின்படி உள்ளக சுயநிர்ணய உரிமை என்றால் இலங்கையினுடைய ஒற்றையாட்சிமுறை உரிமையை ஏற்றுக்கொண்டு அங்கே சில அதிகாரங்களை வாங்கிக்கொண்டு அங்கே வாழ்வதற்குப் பெயர்தான் உள்ளக சுயநிர்ணய உரிமை. ஆனால் வெளியக சுயநிர்ணய உரிமை என்பது அந்த நாட்டிலே நாம் ஒரு தனித்த பகுதியை வாங்கிக்கொண்டு நமக்கென்று ஒரு தனியரசை அமைத்துக்கொண்டு ஒரு தன்மானத்தோடு ஒரு தனிமையோடு வாழ்வதற்குத்தான்? வெளியேற்ற தனி சுயநிர்ணய உரிமை உதவும். இந்த அடிப்படையிலே இனிவரும் காலத்திலே தேசியத் தலைவர் சொன்னதுபோல தனித்தாயக தமிழீழ தனியரசை அமைப்பதைத் தவிர வேறு எந்தப் பேச்சுவார்த்தையிலுமே நாங்கள் ஒருபோதும் சம்மதிக்க மாட்டோம் என்று தெளிவாகத் திட்டவட்டமாகச் சொல்லியிருக்கின்றார். தேசியத் தலைவரே அப்படிச் சொல்லியிருக்கும்பொழுது, நீங்கள் வெறுமனே தன்னாட்சி, தன்னாட்சியென்று குறிப்பிட்டுச் சொல்கின்றீர்கள். நான் உங்களிடம் வெளிப்படையாகக் கேட்கின்றேன் நீங்கள் கேட்பது தனியாட்சியா? தன்னாட்சியா? தன்னாட்சியென்றால் நீங்கள் சிங்களவருடைய ஒற்றையாட்சியை விரும்புகின்றீர்கள் என்று பொருள். தனியாட்சியென்றால் தலைவர் கேட்டதுபோல தமிழீழ தனியரசு. நீங்கள் தன்னாட்சியைக் கேட்கின்றீர்களா? தனியாட்சியைக் கேட்கின்றீர்களா என்று தெளிவாக கேட்டபொழுது அதற்கும் அவர்கள் சரியான பதிலைக் கூறவில்லை. நாங்கள் இன்னும் யாப்பை இயற்றவில்லை. யாப்பை இயற்றும்பொழுது இதையெல்லாம் நாங்கள் கவனத்தில்கொள்கின்றோம் என்று சொன்னார்கள்.

**ஆனால் ஒரு இனம் திட்டமிட்டு இன்னொரு இனத்தை அழித்துக்கொண்டிருக்கின்ற வேலையைச் செய்கின்ற பொழுது அதாவது, 60 ஆண்டுகளாக அவர்கள் அதைச் செய்கின்றபொழுது ஏன் சொல்லத் தயங்குகின்றீர்கள், யாருக்காகச் சொல்லத் தயங்குகின்றீர்கள். உங்களைத் தடுப்பது யார்? என்று கேட்டேன்.**

அப்பொழுதுதான் நான் சொன்னேன் , நீங்கள் விதிமுறையை வகுக்காமல் ஒரு திம்புப் பேச்சுவார்த்தை, 2003ல் தேசத்தின் குரல் அன்ரன் பாலசிங்கம் அண்ணா அவர்களின் நடத்திய பேச்சுவார்த்தை. அதில் தன்னாட்சி என்று சொல்கிறார். ஆனால் அதையே தலைவரும் அரசியல் குழுவும் விவாதித்து இனிமேல் ஒரே கோரிக்கைதான் தனித் தாயக தமிழீழ தனியரசுதான் என்று தெளிவாகச் சொன்னார்கள். இந்த இரண்டும் நம்மைப் பொறுத்தளவிலே திம்புப் பேச்சுவார்த்தையானாலும் 2003 பேச்சுவார்த்தையானாலும் நம்மைப்பொறுத்தளவிலே தோல்வியடைந்த ஒரு சம்பவத்தை நீங்கள் நாடு கடந்த தமிழீழத்திற்கு வலுச்சேர்ப்பதாகச் சொல்லுகின்றீர்கள். அப்படியென்றால் நீங்கள் தன்னாட்சி என்பதோடு நிற்பதாக நாங்கள் நினைக்கின்றோம். எனவே நீங்கள் அதற்குத் தெளிவுபடுத்தவேண்டும் என்றபோது, அதற்கும் அவர்கள் தெளிவாகப் பதில் சொல்லவில்லை. ஆகவே ஒன்று தெரிகின்றது. அவர்கள் யாருடைய ஒரு நிர்ப்பந்தத்தினாலோ அல்லது யாருடைய கட்டுப்பாட்டினாலோ செயற்படுகின்றார்கள் என்ற சந்தேகம் எழுகின்றது. நான் மட்டுமல்ல ஊடகவியலாளர்கள், பார்வையாளர்கள் எனப் பல பேர்களும் அந்தக் கேள்வியைத்தான் அவர்களிடம் கேட்டார்கள்.

ஒருவர் சொல்கின்றார், அமெரிக்கப் பேராசிரியர்கள் 20 பேர் இந்த நாடு கடந்த அரசுபற்றி ஏன் நீங்கள் யோசிக்கக்கூடாது என்று எங்களிற்குப் பரிந்துரை செய்தார் என்று கூறுகின்றார். உருத்திரகுமாரன் 16 பக்க அறிக்கையிலே என்ன சொல்லியிருக்கின்றார் என்றால் செல்வராசா பத்மநாதன் முன்மொழிந்தது இந்த நாடுகடந்த தமிழீழம் என்று சொல்லி. இதிலே எது உண்மையென்று எனக்குத் தெரியவில்லை. செல்வராசா பத்மநாதன் அவர்கள் இப்பொழுது சிங்கள அரசாங்கத்தினுடைய கட்டுப்பாட்டில் இருக்கின்றார். நீங்கள் இப்பொழுது அவர் முன்மொழிந்தது என்று சொன்னால், ஒருவகையிலே அவருக்குத் தீங்கு செய்வதாகக்கூட அது அமைந்துவிடலாம். ஆகவே செல்வராசா பத்மநாதனுடைய பெயரரைப் பயன்படுத்துவது கூட அவருக்குப் பாதகமாக அமையலாம். ஏனென்றால் எதிரியின் கையில் அவர் இருக்கின்றார். அதோடு மட்டுமல்ல, ஐந்தாறு ஆண்டுகளிற்கு முன்னரேயே தலைவரவர்களாலே அவருக்குக் கொடுக்கப்பட்ட பணிகள். அவருடைய தொடர்புகள் துண்டிக்கப்பட்டதாக தலைவர் அவர்களாலே சொல்லப்பட்டபோது, நீங்கள் அவரை இதிலே முன்மொழிவது எந்தவகையிலே சரியாக இருக்கும். எனவே நான் உங்களைக் கேட்டுக் கொள்கின்றேன், வட்டுக்கோட்டை மீள்வாக்கெடுப்பு நடாத்துபவர்கள் நடத்தட்டும். அது உங்களிற்கு வலுச்சேர்க்கும். அவர்கள் எல்லா நாடுகளிலும் இந்த வட்டுக்கோட்டைத் தீர்மானத்தின் மீதான மீள்வாக்கெடுப்பை நடத்த செயல்பட்டுக் கொண்டிருக்கின்றனர். ஒவ்வொரு இடத்திலிருந்தும் பல்லாயிரக்கணக்கானவர்கள் வந்து இந்த வாக்கெடுப்பிலே கலந்துகொள்கின்றார்கள். ஆனால் நீங்கள் ஐந்தாறு பேரை வைத்துக்கொண்டு....

என்னைப் பொறுத்தளவில் நாணயத்தினுடைய ஒருபக்கமென்றால். நீங்கள் இன்னொரு பக்கம். உறவு ரீதியாகத்தான் பார்க்கவேண்டுமே தவிர, முரண்பாடானது, எதிரானது என்று பார்க்ககூடாது.

தொடர்ச்சி 31ம் பக்கம் ...